<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 16ம் நாள் வியாழக் கிழமை

**<u>புதிய இடை நிலை மனு எண். 06/2026</u>**

in

**<u>அசல் வழக்கு எண்.174/2019</u>**

அமிர்தம்மாள் (இறந்தார்)
ராஜீ வகையறா .....மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள்

... எதிர் ...

ஜெகதீசன் மற்றும் மூவர் .....எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 02.07.2026-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதார்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.அழகேசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.ராமையா, அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சானறாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, பிராதின் சொத்து விபரத்தில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள துல்லியமான அளவுகளின் உரிய திருத்தம் செய்து கொள்ள (கீழ்க்கண்ட திருத்தல் விவரப்படிக்கு) அனுமதித்து தகுந்த உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சம் கட்டளை 6 விதி 17ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருத்தல் விபரம்

1) பிராது சொத்து விபரத்தில் நத்தம் புல எண். 265/90–ல் ஆக கீழ்புறம் என இருப்பதற்கு அடுத்துள்ளவைகளை நீக்கிவிட்டு அதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட வரிகளை சேர்க்கவும்– தென்வடல் அளவு இருபுரமும் 23 மீட்டர் ஆகும். வடபுரம் 6 மீட்டர் சரியாக உள்ளதிலிருந்து ஆக்கிரமிப்புகள் சிறிது சிறிதாக வடபுறமிருந்து தென்புறம் நோக்கி வரும் போது முதல் 3 மீட்டர் நீளத்தில் கிழமேல் ஆக்கிரமிப்பு சுமார் 0.5 மீட்டரும், 53/4 மீட்டரில் கிழமேல் 1 மீட்டரும், வடபுறத்திலிருந்து வரும் போது நடுமையமான 11.5 மீட்டர் அளவில் 1.5 மீட்டரும், 17.25 மீட்டரில் 1.5 மீட்டரும், தென்புறமுகப்பில் 1.8 மீட்டர் அளவைகளிலும் கிழமேலாக ஆக்கிரமிப்பு உள்ளது தான் தாவாச் சொத்தாகும். அது நீதிமன்ற ஆணையாளரின் வரைபடத்தில் EDF என காண்பிக்கப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள் மேற்படி வழக்கை தாக்ல செய்யும் சமயம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகளின் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிய கட்டுமானத்தின் அளவுகளை உத்தேசமாக குறிப்பிட்டு தாக்கல் செய்தோம் என்றும், மேற்படி ஆக்கிரமிப்பு பகுதி குறித்து ஒரு மாதிரி வரைபடமும் மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள் தரப்பில் பிராதுடன் சேர்த்து தாக்கல் செய்தோம் என்றும், அவைகள் மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள் தரப்பில் உத்தேசமாக குறிப்பிட்ட அளவீடுகள் என்றும், அதன் பின்னிட்டு மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள் தரப்பில், தாவாச் சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புப் பகுதியை துல்லியமாக அளந்து கண்டறியும் பொருட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்திட மனுச் செய்து, அதன்படி அளவை செய்ததில், ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ளவாறு ஆக்கிரமிப்பு பகுதிகள் வந்தது என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ளவாறு மேற்படி துல்லியமான ஆக்கிரமிப்புப்பகுதிகளை மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள சொத்து விபரத்தில் குறிப்பிட்டு திருத்தம் செய்யவும் அனுமதித்து தகுந்த உத்தரவாகக் கோரி இம்மனுச் செய்கிறார்கள் என்றும், இம்மனு அனுமதிக்கப்படாத பட்சத்தில்மனுதாரர்கள்/2 முதல்

4 வாதிகளுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே பிராது சொத்து விபரத்தில். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆக்கிரமிப்பு பகுதி குறித்த அளவீடுகளில் உரிய திருத்தம் செய்து கொள்ள தகுந்த உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:(இதனை மற்ற எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்கின்றனர்)</u>

மனுதாரர்களின் மனு பொய், பிரட்டு, மோசடி, எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், இதில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளபட்டவை தவிர பிறயாவற்றையும் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மறுக்கின்றனர் என்றும், தாவா சொத்தில் எந்த ஒரு ஆக்கிரமிப்பும் இல்லை என்றும், தாவா சொத்தானது நத்தம் சொத்து ஆகும் என்றும், மனுதாரர்கள் / 2 முதல் 4 வாதிகள் கூறியவாறு தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு அளவு ஒன்று இல்லை என்றும், பிரதிவாதிகள் எக்காலத்திலும் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், தாவா சொத்தை இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள், முன்பு கூரை வீடு கட்டி அதன் பின்பு தார்சு வீடு கட்டி பல நூற்றாண்டுகளாக எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் முன்னோர்கள் காலம் தொட்டு தற்போது உள்ள விஸ்தீர்ன அளவு படி அனுபவம் செய்துகொண்டு உள்ளனர் என்றும், இந்த திருத்த மனுவானது வழக்கின் தன்மையை மாற்றிவிடும் என்றும், இந்த திருத்த மனுவின் மூலமாக புது வழக்கை அறிமுகப்படுத்த இந்த மனுதாரர்கள் / 2 முதல் 4 வாதிகள் முயற்சிக்கின்றனர் என்றும், இந்த திருத்த மனுவை அனுமதித்தால் இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பெருத்த கஷ்டம் நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே, மனுதார்கள் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**<u>3. பிரச்சனைக்கான தீர்வு</u>**

(1) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவும், வழக்குச் சொத்து விவரத்தில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள துல்லியமான , ஆக்கிரமிப்பு பகுதி குறித்த அளவீடுகளை உரிய திருத்தம் செய்து கொள்ள உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)மேலும், மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள் தரப்பு மனு சங்கதிகளில் இருந்து இந்த மனுவானது வழக்குரையில் சொத்து விரவத்தில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு அளவீடுகளுக்கும், நீதிமன்ற ஆணையர் மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு அளவீடுகளுக்கும் உள்ள வேறுபாட்டை திருத்துவதற்காக மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மாறாக வழக்கின் அடிப்படை காரணத்த்தையோ அல்லது வழக்கின் தன்மையை மாற்றுவதற்காக இல்லை என்பதும் தெரியவருகிறது.

3)அதே வேளையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதள் தரப்பில், தாவா சொத்தில் எந்த ஒரு ஆக்கிரமிப்பும் இல்லை என்றும், தாவா சொத்தானது நத்தம் சொத்து ஆகும் என்றும், மனுதாரர்கள் / 2 முதல் 4 வாதிகள் கூறியவாறு தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு அளவு ஒன்று இல்லை என்றும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் எக்காலத்திலும் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், தாவா சொத்தை இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள், முன்பு கூரை வீடு கட்டி அதன் பின்பு தார்சு வீடு கட்டி பல நூற்றாண்டுகளாக எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் முன்னோர்கள் காலம் தொட்டு தற்போது உள்ள விஸ்தீர்ன அளவு படி அனுபவம் செய்துகொண்டு உள்ளனர் என்றும், இந்த திருத்த மனுவானது வழக்கின் தன்மையை மாற்றிவிடும் என்றும், இந்த திருத்த மனுவின் மூலமாக புது வழக்கை அறிமுகப்படுத்த இந்த மனுதாரர்கள் / 2 முதல் 4 வாதிகள் முயற்சிக்கின்றனர் என்றும், இந்த திருத்த மனுவை அனுமத்தால் இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பெருத்த கஷ்டம் நஷ்டம் ஏற்படும் என்றும் ஆட்சேபனை

செய்யப்பட்டுள்ளது.

4)மேற்படி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளபோதிலும், இந்நீதிமன்றம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பான 2011-4LW-252, Revathy and 2 others Vs Savarimuthu என்ற முன் தீர்ப்பினை கருத்தில் எடுத்துக் கொள்கிறது. மேற்கண்ட தீர்ப்பில், "It is common Knowledge that while deciding the application for amendment the merits of the amendment cannot be discussed and it has to be seen only at the time of trial" என்று கூறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட முன்தீர்ப்பு மற்றும் தீர்வு சட்டத்தின் படி திருத்தத்தின் தகுதியை பற்றி தற்போது விவாதிக்க இயலாது என்பதும், அது வழக்கு விசாரணையின் போது மட்டுமே பார்க்க இயலும் என்பதும் தெளிவாகிறது.

(5) மேலும், இந்நீதிமன்றம் மாண்புமிகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்பான (2007) 5 SCC 602, Usha Balashaheb Swami and others Vs Kiran Appaso Swami and others என்ற முன் தீர்ப்பினை மேற்கோள்காட்டுகிறது. மேற்கண்ட தீர்ப்பில்,
" the amendment application made under Order VI Rule XVII CPC has to be liberally allowed provided such amendment do not result in causing injustice or irretrievable prejudice to the opposite party" என்று கூறியுள்ளது.

எனவே, மேற்கண்ட தீர்ப்பின் படி தற்போதுள்ள இந்த மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும், மேலும் வழக்கு விசாரணையின் போது இது தொடர்பாக குறுக்கு விசாரணை செய்யவும், எதிர்வாதம் செய்யவும் வாய்ப்புள்ளதாலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித குந்தகமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், மேலும் இவ்வழக்கினை சரியான முறையில் தீர்வு காண்பதற்கும் மற்றும் வழக்கில் பலவித நடவடிக்கைகளை தவிர்க்கவும் இயலும்

எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையில் மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள் கோரியுள்ளபடி அசல் வழக்கை திருத்துவதற்கு இந்த மனுவை அனுமதிக்க உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகளின் மேற்படி செய்கையால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்பட்டுள்ள காலதாமத்தை ஈடு கட்டும் வகையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் இந்த மனுவினை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்கள்/2 முதல் 4 வாதிகள் செலவு தொகையாக ரூ.500/– எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 18.12.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 16–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.07.16 14:16:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.07.16 14:16:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.